**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3452/ஆ5/2024, நாள். 25/01/2025**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் – பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் (SIDP) 3.0 – மாவட்ட அளவிலான செயல் வடிவம் தரும் முகாமிற்கு (Boot Camp) – தேர்தெடுக்கப்பட்ட பள்ளிகளின் வழிகாட்டி ஆசியர்கள் மற்றும் மாணவர்கள் விவரம் தெரிவித்தல் – சார்பு

பார்வை

1. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.048647/எம்1/இ1/2024, நாள். 24.09.2024, 07.10.2024, 20.11.2024
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 28.08.2024, 10.10.2024
3. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.048647/எம்1/இ1/2024, நாள். 24.01.2025

•••••

மேற்காணும் பொருள் சார்பாக தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மற்றும் பள்ளிக்கல்வித்துறை மற்றும் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் (SIDP) சார்பாக இந்நிதியாண்டில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் இந்த திட்டத்தில் பதிவு செய்து அனைத்து பள்ளிகளிலும் வழிகாட்டி ஆசியர்கள் நியமிக்கப்பட்டு அவ்வழிகாட்டி ஆசிரியர்களுக்கு பார்வை 2–ல் காணும் 10.10.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக 15.10.2024 மற்றும் 18.10.2024 ஆகிய இரண்டு நாட்களுக்கு SSA அலுவலக வளாகத்தில் மாவட்ட அளவிலான பயிற்சிகள் அளிக்கப்பட்டது. அவர்கள் தங்களுக்கான கற்றல் பகுதியினை நிறைவு செய்து அணிகள் தங்களது புத்தாக்க கண்டுபிடிப்புகள் (Ideas) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் அணிகள் சமர்பித்துள்ள கண்டுபிடிப்பிற்கான ஆய்வானது மதிப்பீட்டாளர்களின் மூலம் முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை என மூன்று கட்டமாக இணையதளம் வழியாக நடைபெற்று செயல் வடிவம் தரும் முகாமிற்கு (Boot Camp) தேர்வு செய்யப்பட்டுள்ள அணிகள் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அந்தந்த மாணவ அணிகள் அவர்களின் கண்டுபிடிப்பினை முன்மாதிரியாக (Prototype) உருவாக்க மாவட்ட அளவில் செயல் வடிவம் தரும் முகாமனது (Boot Camp) 27.01.2025 முதல் 01.02.2025 முடிய உள்ள நாட்களில் ஏதேனும் இரண்டு நாட்களுக்கு நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் நடைபெறும் செயல் வடிவம் தரும் முகாமில் (Boot Camp) கலந்துக் கொள்ளும் பொருட்டு தேர்வாகியுள்ள அணிகள் விவரம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மாவட்ட அளவிலான செயல் வடிவம் தரும் முகாம் (Boot Camp) நடைபெறும் இடம், நாட்கள் மற்றும் நேரம் போன்ற விவரங்கள் கூடிய விரைவில் தெரிவிக்கப்படும். அணிகள் தேர்வாகியுள்ள விவரங்களை சம்மந்தப்பட்ட வழிகாட்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தெரிவிக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அவர்களுக்கு தேவையான செலவுகள் (போக்குவரத்து, உணவு, தங்குமிடம் போன்ற) தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைப்பு – தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகள் விவரம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னை
3. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம்
4. மாவட்ட சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர், முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர்.